வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (13.7.2025) ஈரோடு மாவட்டம், திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோயிலில் புதியதாக முருகன் சிலை அமைக்கும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையாளர் .பி.என்.ஸ்ரீதர், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு மாநிலங்களவை உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திர குமார் உட்பட பலர் உள்ளனர்.

ஈரோடு மாவட்டம் –

திண்டலில் 186 அடி உயர முருகன் சிலை அமைக்கப்படவுள்ள இடம்!

அமைச்சர்கள் சு.முத்துசாமி – பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு!

ஈரோடு, ஜூலை 14- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (13.07.2025) ஈரோடு மாவட்டம், திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளையும், 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி ரூ.30 கோடி மதிப்பீட்டில் 186 அடி உயர முருகன் சிலை அமைக்கப்படவுள்ள இடத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பி.கே.சேகர்பாபு பேச்சு!

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு திருக்கோயிலின் திருப்பணிகளுக்கு அதிக அளவு முக்கியத்துவம் அளித்து எண்ணிலடங்காத் திருப்பணிகள் பெருந்திட்ட வரைவின் வாயிலாக நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் எல்லாம் நிறைவுபெறுகின்ற போது மன்னர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற திருப்பணிகளை விட திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்ற திருப்பணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இதுவரை 3,325 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்று உள்ளது. அதில் 125 முருகன் திருக்கோயில்களாகும். அறுபடை வீடுகளில் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் உள்பட 46 திருக்கோயில்களுக்கு நாளை குடமுழுக்கு நடைபெற உள்ளது. இந்தாண்டு இறுதிக்குள் 3,500 திருக்கோயில்களை எட்டும்.

அரசு மானியம்!

இந்த அரசு பொறுப்பேற்ற பின், எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலையத்துறைக்கு 1,120 கோடி ரூபாயை அரசே மானியமாக வழங்கியுள்ளது. பெருந்திட்ட வரைவின்கீழ் பழனி திருக்கோயிலில் முதல் கட்டமாக ரூ. 98 கோடி மதிப்பீட்டிலும், இரண்டாம் கட்டத்தில் ரூ. 58 கோடி மதிப்பீட்டிலும், திருச்செந்தூரில் உபயதாரர் நிதி, திருக்கோயில் நிதி மற்றும் அரசு நிதி ரூ. 416 கோடி மதிப்பீட்டிலும், திருத்தணியில் ரூ.98 கோடி மதிப்பீட்டிலும், மருதமலை மற்றும் சுவாமிமலையில் மின்தூக்கி அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. திருச்செந்தூர் திருக்கோயில் திருப்பணிகளில் 70 சதவீத பணிகள் நிறைவுப்பெற்றுள்ளன. வரும் அக்டோபர் மாதத்திற்குள் அனைத்து பணிகளும் நிறைவு செய்யப்படும்.

மேலும், திருத்தணி திருக்கோயிலுக்கும் ரூ. 67 கோடி மதிப்பீட்டில் மாற்றுமலைப் பாதை அமைக்கும் பணியும், சிறுவாபுரி திருக்கோயிலுக்கு ரூ. 57 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்கம் பணிகளும் நடைபெற்று வருகின்றன. வைசம், வைணவம் என அனைத்து திருக்கோயில்களிலும் திருப்பணிகள் மேற்கொண்டு வருவதோடு தமிழ் கடவுள் முருகனுக்கு பழனியில் மாநாடு நடத்திப் பெருமை சேர்த்த ஆட்சி இந்த ஆட்சியாகும்.

உலகெல்லாம் முருகன் சிலை அமைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு ஸ்தபதிகளை அனுப்பி பார்வையிட்டு விவரங்களை சேகரித்து மருதமலை, திண்டல் மற்றும் திமிரியில் முருகனுக்கு மிக உயரமான சிலைகளை அமைக்க உள்ளோம். இந்த சிலைகள் காலங்களை கடந்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பெயரை சொல்லும் அளவிற்கு மிக சிறப்பாக அமையும். இந்த அரசு பொறுப்பேற்றபின், உபயதாரர்கள் மட்டும் ரூ. 1400 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஆட்சியில் 10 ஆண்டுகளுக்கு மேலாக அனுமதி வழங்கப்படாமல் இருந்த திருச்செந்தூரில் எச்.சி.எல் நிறுவனத்தின் மூலம் ரூ. 200 கோடி திருப்பணிக்கும், பெரியபாளையத்தில் ரூ. 170 கோடி திருப்பணிக்கும் உடனடியாக அனுமதி வழங்கி பணிகளை மேற்கொண்ட அரசு திராவிட மாடல் அரசாகும். ஈரோடு மாவட்டம், திண்டலில் ஆசியாவிலேயே மிக உயரமான முருகன் சிலை அமைக்க உபயதாரர்கள் பலர் நிதி வழங்க முன்வருகின்றனர். அனைத்து தரப்பினரும் எதிர்பார்க்கும் வகையில் திண்டலில் முருகன் சிலை அமைக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அமைச்சர் முத்துசாமி பேச்சு!

அமைச்சர் சு.முத்துசாமி பேசியதாவது

ஈரோடு மாவட்டம், திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோயிலில் மிக உயரமான முருகன் சிலை அமைக்க வேண்டுமென முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தபோது, உடனடியாக அனுமதி வழங்கினார்கள். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் இந்தாண்டு அதனை சட்டமன்ற அறிவிப்பாக வெளியிட்டு ஆரம்ப கட்ட பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. முருகன் சிலையானது ஆசியாவிலேயே மிக உயரமாக 186 அடி உயரத்தில் சிமெண்டால் அமைக்கப்பட உள்ளது. இதன் பீடமானது 3.5 அடி உயரத்தில் கருங்கல்லால் அமைக்கப்படும். மலையில் உயரம் 50 அடியாகும். ஆக மொத்தம் மலையில் உயரத்தையும் சேர்த்து 240 அடி உயரத்தில் முருகன் சிலை அமையும். இந்த திருக்கோயிலுக்கு தற்போது வரும் பக்தர்கள் கூட்டத்தை போல் 5 மடங்கு கூட்டம் வந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் அனைத்து வசதிகளும் அமைக்கப்படும்.

மேலும், இத்திருக்கோயில் சார்பில் இரண்டு திருமண மண்டபங்கள் கட்டும் பணியும், கீழேயுள்ள சிவன் கோயில் திருப்பணியும், இராஜகோபுர திருப்பணியும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. அனைத்து பணிகளுக்கும் தாராளமாக நிதி வழங்க உபயதாரர்கள் முன் வருகின்றனர். இத்தகைய பணிகளுக்கு உடனுக்குடன் அனுமதி வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அந்தியூர் ப. செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகராட்சி மேயர் எஸ். நாகரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.சாந்தகுமார், இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் அ.தி.பரஞ்சோதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணியில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் பெரம்பூர் வடக்கு பகுதி 34 வது வட்டத்தில் தனது தொகுதிமக்களின் இல்லங்களில் நேரிடையாக சந்தித்து உறுப்பினர் சேர்க்கும் பணியினை மேற்கொண்டார். உடன் பகுதி கழக செயலாளர் அ.முருகன் வட்டச் செயலாளர் கே.வி.இராஜன் பகுதி நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் பி.எல்.ஏ 2 மற்றும் 13 வது பாகத்தின் பிடிஏ பணியாற்றினர்

களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் முன்னிலை! சைதை ஜாபர்கான் பேட்டையில்

சென்னை உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு தங்க நாணயம்!

மாவட்டச் செயலாளர் -அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, ஜூலை 14 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது நிறைவு விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்குப் பகுதி தி.மு.க. 139 வது வட்டம், ஜாபர்கான்பேட்டை, சென்னை உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 500 க்கு 400க்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஒரு கிராம் தங்க நாணயம் வழங்கும் விழா 24.7.2025வியாழக்கிழமை அன்று காலை 10 மணிக்கு ஜாபர்கான்பேட்டை பள்ளி வளாகத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு கழக தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர்கள் மண்டலக் குழுத்தலை வர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், மற்றும் சைதை மாஅன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சைதை த.சம்பத் , வி.பி.ஜானகிராமன், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், சைதை சாதிக், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், டி.என்.சிவமணி, த.மணி ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஒரு கிராம் தங்கநாணயத்தை மாவட்டக் கழகச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கி சிறப்பிக்கிறார்.

இந் நிகழ்ச்சியில் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், மின்னல் கந்தப்பன், எம்.எஸ்.ஹரிபாபு, தா.மோகன்குமார், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, ஆர்.கிருஷ்ண குமார், நா.மணிகண்டன், கோ. பாஸ்கர், அஞ்சல் ராமன், கு.புகழ்வேந்தன், பொன்.ஜெய்சிங், பாய்லர் ஏ.ரவி, ஜி.பாபு, ஆர்.எல்.காந்தன், மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்தி சுந்தரம், அ.அயாத்பாஷா, இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், சைதை எல்.சந்திரன், து.முரளி, சி.டி.காசிநாதன், வி.சபரி, அ.சுப்பிரமணி, ஜி.ஏழுமலை, கொடி சுரேஷ், டி.கோபால கிருஷ்ணன், எஸ்.முகமதுஅலி, என்.ராஜேஷ், மு.காளியப்பன், நியூகாலனி, சம்பத், வி.பி.சிவக்குமார், ஜிம் க.பிரபு, க.விக்னேஷ், இரா.சத்யா, எம்.அருண், பி.டி.சி.ரவி, சி.ராஜா, சைதை ம.திலீபன், மதிவாணன், வ.ராஜா, சரவணன், சி.ஆறுமுகம், சி.மங்கையர்திலகம், எல்.மல்லிகா, கே.காஞ்சனா, என்.மணிகண்டன், க.கஜேந்திரன், சரவணன், மு.அஜீம், வி.லோகநாதன், ஆர்.அருண், வ.இளங்கோ, வினோத்குமார், கே.தினேஷ், வி.வினிதா, எம்.ஜெ.கெவின், அருண், கண்ணதாசன், கே.சுரேஷ், கோகுல் குமார், வி.பிரவீன்குமார், கு.அஜித்குமார், அ.அஜய், ஜெ.கதிரவன், சி.வி.பிரவின், வி.சமந்தா செல்வம், தெ.கொரிய குமார், ஆர்.தண்டபாணி, எஸ்.நித்தியானந்தம், ஜி.கங்காதரன், ஆர்.சுரேஷ், கு.சுகுமாறன், ஏ.பழனி, வி.விஜயகுமார், வெங்கடேசன், சைதை பாஸ்கர், ஜெ.ரவிச்சந்திரன், வினோத் துளசிங்கம், சென்ட்ரல் குமார், பி.பழனி, பு.பாஸ்கர், பி.ஆசைத்தம்பி, அ.நெடு ஞ்செழியன், சிட்டி சலுன் ரவி, சந்திரன், எஸ்.குணசேகர்,இ.விமல், கொடி எல்.மணி, மா.ராஜேஷ், ப.ராகுல், டி.சுதாகர் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். விளையாட்டு மேம்பாட்டு அணி பகுதி துணை அமைப்பாளர் பாபு எல்லப்பன் நன்றி கூறுகிறார்.

400க்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் என்.ஹரினி, எஸ்.ரக்ஷிதா, எம்.ரீனா, எஸ்.ரிதீஷ் குமார், ஆர்.கீர்த்தனா, ஆர்.நிவேதா, பி.தமிழ்ச்செல்வன்,இ.நவீனா ஆகியோர் ஒரு கிராம் தங்க நாணயம் பெறுகின்றனர்.

அதே போன்று 500க்கு மேல் 400 க்குள் மதிப்பெண் பெற்ற ஏ.ரஞ்சினி, எஸ்.பிரேம்குமார்,கே.பவானி, வி.சந்தியா, எஸ்.அகஸ்டின், ஆர்.லாவண்யா, கே.ஷாயின்பேகம், வி.தியாஸ்ரீ,எம்.திவ்யதர்ஷினி, எஸ்.விஷ்ணு, எஸ்.தேவி, ஆர்.யாழினி, சி.சௌந்தர்யா ஆகிய மாணவர்களுக்குதலா இரண்டாயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.

செம்மொழி நாளை முன்னிட்டு புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் - 1000 பேருக்கு நலஉதவிகள்!

வழக்கறிஞர் சே.மெ. மதிவதனி - போடி காமராஜ் சிறப்புரையாற்றினர்!

சென்னை, ஜூலை 14 - சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொது கூட்டம் மற்றும் ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி தி,மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 16 வது வட்டம் மணலி புதுநகர் திருவள்ளுவர் சிலை அருகே மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் வரவேற்று பேசினார். மாவட்ட துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், 15 வது வட்டச் செயலாளர் கே.அங்குசாமி, 17 வது வட்ட செயலாளர் கே.கருணாகரன், 19 வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செ ல்வன், 23 வது வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு, 23 (அ) வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன், பகுதி கழக நிர்வாகிகள் வி.திராவிடவீரன், கவுன்சிலர் ஆ.ராஜேந்திரன், பி. நிர்ம ல்குமார், பி.தரணி, பா.ச ந்திரன், நா.மோகன்குமார், நாகூரார், கே.செல்வன், கவுன்சிலர் நந்தினி சண்முகம், எஸ்.கருணாகரன், 16 வது வட்ட நிர்வாகிகள் இ.அருள், இ.வெங்கடேசன், என்.பரசுராமன், எம்.புவனேஸ்வரி மகேஷ்குமார், இ. குமரவேல், கே.ராஜ்மோகன், சி.முத்தையா, வி.மாரி, கே.எ.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி மற்றும் தலைமை கழக சொற்பொழிவாளர் மோடி காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் சாதனைகளையும், ஒன்றிய அரசின் வேதனைகளையும் எடுத்துக் கூறினார்கள்.

இக்கூட்டத்தில் 16வது வட்டத்திற்குட்பட்ட 2 தாய்மார்களுக்கு தையல் இயந்திரம் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. மேலும் 1000 தாய்மார்களுக்கு சேலைகளும் வழங்கப்பட்டது. இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் பாபு, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபால கிருஷ்ணன், அம்மு மூர்த்தி, எஸ்.உதயகுமார், கே.சண்முகப்பிரியன், எஸ்.சிவகுமார், டி.வினோத், ஜி.ராஜ்குமார், எஸ்.கருணாகரன், ஆர்.ஜெயபாரதி, ராஜேஸ்வரி, ஜி.வயலட் ராணி, சகிலா, மணலி புதுநகர் சாந்தி, பார்கவி, ர.விஜய் ஆனந்த், எம்.என். அஜய் தென்னவன், அ.விஜயன், ஜி.ராஜேஷ் கண்ணன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், எலந்தனூர் வி.சிவப்பிரகாஷ், அ.சாந்தகுமார், எழில்குமார், விக்னேஸ்வரன், ஹரி, சுதாகர், முத்துகிருஷ்ணன்,

மணலி புதுநகர் சி.எம். ராஜா, வழக்கறிஞர் இளமுருகு, செமின் எடிசன், செபின் எடிசன், கார்த்திக், பர்மா நகர் தினேஷ் சங்கர், சரவணன், வக்கீல் சுரேந்திரன், சடையங்குப்பம் நைனியப்பன், குளக்கரை மஞ்சுநாதன், கடப்பாக்கம் மகேஷ்குமார், சாம்ராஜ், ஜெயபால், விக்னேஷ், ஆர். மகாலட்சுமி, ரூப் குமார், ஹேமந்த், மணிகண்டன், காமராஜ் புரம் கிருபாகரன், அரியலூர் நாகராஜ், செட்டி மேடு திவாகர், மூர்த்தி, எஸ். பாலாஜி, எஸ்.ஜோசப், வழக்கறிஞர்கள் சண்முகம், எம். என்.தளபதி, காவாங்கரை வி.ஆர்.கே.ஜவகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சியின் முடிவில் பகுதி துணை செயலாளர் கே.சிவசங்கரன் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.

மாதவரம் வடக்கு பகுதி, 23 (அ) வட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி நடைபெற்று வரும் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை முகாமை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், 23 (அ) வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன் ஆகியோர் முன்னிலையில் மாதவரம் தொகுதி தலைமை கழக பார்வையாளர் டாக்டர் ஜெ.அருண் நேரில் பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினார். வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் என திரளானவர் இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

"உங்களுடன் ஸ்டாலின்" முகாம்!

கரூர் மாவட்டத்தில் 179 இடங்களில் நடைபெறுகிறது!

மாவட்ட பொதுமக்கள் பயன்பெற வேண்டுகோள் – மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கரூர், ஜூலை 14 – கரூர் மாவட்டத்தில் நடைபெற உள்ள "உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் பொதுமக்களுக்கு அரசின் திட்டங்கள் சென்றடைய உதவிட வேண்டும் என கரூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டதாக மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கரூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) கரூர் மாவட்ட கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி சிறப்புரை யாற்றினார். கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

கரூர் புதிய பேருந்து நிலையம், அறிவியல் பூங்கா, கரூர் காமராஜ் மார்க்கெட், வெங்கமேடு மீன் மார்க்கெட் திறப்பு விழா மற்றும் 18331 பயனாளிகளுக்கு நலத்திடங்கள் வழங்க அனுமதி வழங்கிய கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், கரூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் வரலாற்று சிறப்புமிக்க புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்த கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் வாயிலாக கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் இருந்து பிஎல்ஏ2, பிடிஏ, பிஎல்சி. மற்றும் பூத் இளைஞர் அணி, பூத் மகளிர் அணி நிர்வாகிகள் 16000 பேர் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ்நாடு அரசின் ஊரக பகுதிகளில் 15 அரசுத் துறைகள் மூலம் 46 சேவைகள், நகரப் பகுதிகளில் 13 அரசுத் துறை சார்பில் 43 சேவைகள் அனைத்து மக்களையும் நேரடியாகச் சென்றடைய வேண்டும் என்கின்ற நோக்கத்துடன் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்துள்ள உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் வரும் 15.07.2025 தமிழ்நாடு முழுவதும் தொடங்கு கிறது. கரூர். அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளில் 179 இடங்களில் மூன்று மாதம் நடைபெறுகிறது. இந்த முகாம்களில் கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் மனுக்களை அதற்கு ரிய அதிகாரிகளிடம் அழைத்து சென்று முகாம்களில் தேவையான ஏற்பாடுகளை செய்து பொதுமக்களுக்கு உதவியாகவும், திட்டங்கள் மக்களை சென்றடையும் வகையில் உதவிட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது ஆகிய தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

கூட்டத்தில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத் துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார்,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராய புரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, மாவட்ட பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, என்.செல்வராஜ், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கரு ப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ் கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சு ண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார்,

கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர். ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.எஸ்.மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.முத்து க்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே. ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல்.கரிகாலன், குளித்தலை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.சந்திரன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாக ராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ.ராமர் (முன்னாள் எம்எல்ஏ), தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேக ரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளி ராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா.அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ணராயபுரம் பேரூர் செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர். மோகன்ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம்.முத்து (ஏ) சுப்பிரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.நாகரத்தினம், பி.காமராஜ், கீதா மணிவண்ணன், எஸ்.காமராஜ், ஏ.அறிவழகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திருவொற்றியூர் கிழக்குப்பகுதி 9 வது வட்டம் பாகம் 211 ல் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தல் பணி சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், வட்ட செயலாளர் எம். எல். சரவணன் ஆகியோர் தலைமையில் பகுதி பிரதிநிதி கா. சீனிகண்ணன் முன்னிலையில் புதிய உறுப்பினர் சேர்த்தல் பணி நடைபெற்றது.உடன் பி. பலராமன், பழனிவேல் மா.பி திருஞானம், எஸ்.துரை உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.